ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

ආර්ථික විද්‍යාව I
பொருளியல் I
Economics I

21 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* 1 தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (×)** இடுவதன் மூலம் காட்டுக.

**1.** ஒரு இலவசப் பொருள் (free good) பின்வருவனவற்றுள் எப்பண்பினைக் கொண்டிருக்கும்?
(1) அப்பொருளின் கேள்வியுடன் ஒப்பிடுகையில் ஓரளவு அருமைத்தன்மையைக் கொண்டிருக்கும்.
(2) அப்பொருளை நிரம்பல் செய்வதில் அமையச் செலவு ஏற்படாது.
(3) அப்பொருளின் உற்பத்தியோ அல்லது நுகர்வோ வெளிவாரி விளைவு எதனையும் ஏற்படுத்தாது.
(4) அப்பொருள் அரசாங்கத்தினால் கட்டணமின்றி இலவசமாக வழங்கப்படும்.
(5) அப்பொருளின் நுகர்வானது சமூகரீதியில் விரும்பத்தக்கது என்பதால் அரசாங்கத்தினால் அப்பொருள் வழங்கப்படும்.

**2.** பொருளியலாளர்களால் 'மூலதனம்' என்னும் பதத்தினால் சிறப்பாகக் கருதப்படுவது,
(1) வேறு பொருள்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்யும் பொருட்டு மனிதர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களையாகும்.
(2) பங்குகள் (stocks) மற்றும் முறிகள் போன்ற வடிவிலான மூலதனத்தை கொள்வனவு செய்யப் பயன்படுத்தப்படும் பணமாகும்.
(3) மூலதனத்தை கொள்வனவு செய்யும் நோக்கில் வீட்டுத்துறையால் திரட்டப்படும் சேமிப்புகளாகும்.
(4) மூலதனத்தைக் கொள்வனவு செய்ய முயற்சியாளரால் பயன்படுத்தப்படும் பணமாகும்.
(5) அசையா ஆதனங்கள், காடுகள், உலோகங்கள் மற்றும் கனியவளங்களாகும்.

**3.** 'எல்லாப் பொருளாதார முறைமைகளும் அருமைப் பிரச்சினையை எதிர்கொள்கின்றன' என்னும் கூற்றினால் கருதப்படுவது யாது?
(1) சமூகத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்கள் சிலவற்றின் தொகைகள் அவற்றின் கேள்வியை விடக் கூடுதலாக இருப்பதாகும்.
(2) ஒரு நாட்டில் கனிமப் படிமங்கள் குறிப்பிட்ட அளவு மட்டுமே கிடைக்கத்தக்கதாக இருக்கும் என்பதாகும்.
(3) வளங்களின் அருமைத்தன்மை காரணமாக நாடுகள் நிறைதொழில் மட்டத்தை அடையத் தவறிவிட்டன என்பதாகும்.
(4) சமூகத்தின் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் அளவுக்கு உற்பத்தி வளங்கள் பற்றாக்குறையாக உள்ளன என்பதாகும்.
(5) பொருளாதார முறைமைகள் சுழற்சி ரீதியில் மீண்டும் மீண்டும் ஏற்படும் விரிவாக்கக் கட்டங்களை எதிர்நோக்கும்போது வளங்களின் பற்றாக்குறை ஏற்படும் என்பதாகும்.

**4.** ஒரு உற்பத்தி இயல்தகவு வளையியின் மீது ஒதுக்கீட்டு வினைத்திறன் கொண்ட புள்ளி எய்தப்படுவது,
(1) ஒவ்வொரு பொருளையும் உற்பத்தி செய்ய மிகக் குறைந்த உள்ளீடுகள் பயன்படுத்தப்படும் போதாகும்.
(2) ஒவ்வொரு பொருளும் எல்லை நன்மைகள் எல்லைச் செலவுகளுக்கு சமப்படும் மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் போதாகும்.
(3) நுகர்வுப் பொருள்களை விட அதிகளவில் மூலதனப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் போதாகும்.
(4) மூலதனப் பொருள்களை விட அதிகளவில் நுகர்வுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் போதாகும்.
(5) பொருளின் விலையானது எல்லை நன்மைகளை விடக் கூடுதலாக உள்ள ஒரு மட்டத்தில் ஒவ்வொரு பொருளும் உற்பத்தி செய்யப்படும் போதாகும்.

[பக் 2 ஐப் பார்க்க

Department of Examinations - Sri Lanka

5. கேள்வி விதியானது,
(1) ஒரு பொருளின் விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி, அப்பொருளின் கேள்வி வளையியை இடப்புறமாக நகர்த்தும் எனக் கூறுகிறது.
(2) ஏனைய காரணிகள் மாறா நிலையில் ஒரு பொருளின் விலை அதிகரிக்கும்போது அதன் கேள்வித்தொகை குறையுமெனக் கூறுகிறது.
(3) ஏனைய காரணிகள் மாறா நிலையில் ஒரு பொருளின் விலை அதிகரிக்கும்போது அதன் கேள்வித்தொகை உயருமெனக் கூறுகிறது.
(4) ஒரு பொருளின் விலை வீழ்ச்சி, அப்பொருளின் கேள்வி வளையியை வலப்புறம் நோக்கி நகர்த்தும் எனக் கூறுகிறது.
(5) ஒரு பொருளின் விலை அதிகரிப்பு, அப்பொருளின் கேள்வி வளையியை இடப்புறம் நோக்கி நகர்த்தும் எனக் கூறுகிறது.

6. ஒரு பொருளின் கேள்வித்தொகை என்பது,
(1) ஒரு குறித்த விலையில் நுகர்வோர் அப்பொருளை கொள்வனவு செய்யத் திட்டமிடும் தொகையாகும்.
(2) அப்பொருளின் விலை மற்றும் நுகர்வோனின் வருமான மட்டம் என்பவற்றிலிருந்து சுயாதீனமானதாகும்.
(3) நுகர்வோனின் கொள்வனவுத் திட்டத்திலிருந்து சுயாதீனமானதாகும்.
(4) எப்போதும் சமநிலைத் தொகைக்கு சமமானதாகும்.
(5) வெவ்வேறு விலைகளில் நுகர்வோர் கொள்வனவு செய்ய விரும்பும் தொகையாகும்.

7. பின்வருவனவற்றில் எது X பொருளின் நிரம்பல் தொகையில் ஒரு அதிகரிப்பை ஏற்படுத்தும்?
(1) ஏனைய காரணிகள் மாறா நிலையில் X பொருளின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(2) X பொருளின் உற்பத்தியில் நிரப்புப் பொருளாகிய Y பொருளின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(3) X பொருளை உற்பத்தி செய்வதற்கான தொழினுட்பத்தில் ஏற்படும் ஒரு முன்னேற்றம்
(4) X பொருளை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் வளங்களின் விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(5) X பொருளின் பதிலீடொன்றின் கேள்வியில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

8. ஒரு போட்டிச் சந்தையில் கேள்வி, நிரம்பல் இரண்டும் அதிகரித்தால் சமநிலை விலை, சமநிலைத் தொகை என்பனவற்றின் மீது ஏற்படும் விளைவு என்னவாக இருக்கும்?
(1) விலை கட்டாயமாக அதிகரிக்கும் ஆனால் தொகை அதிகரிக்கலாம், குறையலாம் அல்லது மாறாதிருக்கலாம்.
(2) தொகை கட்டாயமாக அதிகரிக்கும் ஆனால் விலை அதிகரிக்கலாம், குறையலாம் அல்லது மாறாதிருக்கலாம்.
(3) தொகை கட்டாயமாகக் குறையும் ஆனால் விலை அதிகரிக்கலாம், குறையலாம் அல்லது மாறாதிருக்கலாம்.
(4) விலை கட்டாயமாகக் குறையும் ஆனால் தொகை அதிகரிக்கலாம், குறையலாம் அல்லது மாறாதிருக்கலாம்.
(5) விலை தொகை ஆகிய இரண்டும் கட்டாயமாக அதிகரிக்கும்.

9. ஒரு குறிப்பிட்ட நுகர்வுப் பொருளின் கேள்வித் தொழிற்பாடு $Q_D = 500 - 5P$ என்னும் சமன்பாட்டினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. 20 ரூபாவுக்கும் 30 ரூபாவுக்கும் இடையில் இப்பொருளின் விலைக் கேள்வியின் வில் நெகிழ்ச்சி யாது?
(1) – 0.25 (2) – 0.33 (3) – 0.43 (4) – 0.52 (5) – 0.66

10. குறித்த ஒரு நாட்டில் ஒரு தேசிய நெருக்கடி நிலையின்போது தமது பெருந்தன்மையை வெளிப்படுத்தும் விதமாக அந்நாட்டு மரக்கறி உற்பத்தியாளர்கள் போட்டிச் சந்தையில் நிலவும் சமநிலை விலையின் அரை மடங்கு விலையில் நுகர்வோர் கொள்வனவு செய்ய விரும்பும் எந்தளவினையும் நிரம்பல் செய்யத் தீர்மானிக்கின்றனர். நடவடிக்கையின் விளைவாக
(1) பொருளியல் மிகை வீழ்ச்சியடையும். (2) பொருளியல் மிகை அதிகரிக்கும்.
(3) பொருளியல் மிகை மாறாதிருக்கும். (4) நுகர்வோன் மிகை வீழ்ச்சியடையும்.
(5) உற்பத்தியாளன் மிகை அதிகரிக்கும்.

11. ஒரு விலை மாற்றத்தின் வருமான விளைவு எதிர்க்கணியமாக இருந்தாலும் பதிலீட்டு விளைவு அதைவிடப் பலம் வாய்ந்ததாக இருக்குமாயின், அப்பொருள்
(1) ஒரு கிபன் பொருளாகும். (2) ஒரு சாதாரண பொருளாகும்.
(3) ஒரு அத்தியாவசியப் பொருளாகும். (4) ஒரு இழிவுப் பொருளாகும்.
(5) ஒரு ஆடம்பரப் பொருளாகும்.

12. சந்தையில் ஒரு உயர்ந்தபட்ச விலை விதிக்கப்படுமாயின்
(1) சந்தையில் தொடர்ச்சியாக ஒரு பற்றாக்குறை ஏற்படும்.
(2) சந்தையில் தொடர்ச்சியாக ஒரு மிகைநிலை ஏற்படும்.
(3) பொருளின் விற்பனையாளர்கள் நன்மை அடைவர்.
(4) எவருமே நன்மையடையமாட்டார்கள்.
(5) நிரம்பல் தொகையானது கேள்வித் தொகையை விட அதிகமாக இருக்கும்.

Department of Examinations - Sri Lanka

[பக் 3 ஐப் பார்க்க

**13.** பின்வருவனவற்றுள் பண்ணை உற்பத்திகள் மீது விதிக்கப்படும் பயனுறுதிவாய்ந்த குறைந்தபட்ச விலையுடன் **தொடர்புபடாத** பிரச்சினை எது?
(1) சந்தையில் தொடர்ச்சியாக மிகை நிரம்பல் காணப்படல்
(2) விவசாயத்துறை சாராத வரி இறுப்பாளர்களிடமிருந்து விவசாயிகளை நோக்கி வருமானம் மாற்றப்படல்
(3) அரசாங்கத்தினால் பாரியளவு மானியங்கள் வழங்கப்படல்
(4) நுகர்வோர் அதிக விலை செலுத்த நேரிடல்
(5) விவசாய விளைபொருள்களுக்கான கறுப்புச் சந்தை தோன்றுதல்

**14.** ஒரு போட்டிச் சந்தையில் விற்கப்படும் ஒரு பொருளின் கேள்வித் தொழிற்பாடானது $Q_D = 180 - 2P$ என்னும் சமன்பாட்டினால் தரப்படுகிறது. சந்தையின் சமநிலை விலை 65 ரூபாவாயின் நுகர்வோன் மிகையின் பெறுமதி
(1) 625 ரூபாவாகும் (2) 1 000 ரூபாவாகும் (3) 1 250 ரூபாவாகும்
(4) 3 250 ரூபாவாகும் (5) 4 500 ரூபாவாகும்

**15.** கூடிச் செல்லும் அளவுத்திட்ட விளைவு விதியானது ஒரு தொழில்நுட்பப் பண்பினை வெளிப்படுத்துவதுடன் அதன்கீழ் நிறுவனத்தின் வெளியீடு அதிகரிக்கும் சதவீதமானது,
(1) நிறுவனத்தின் உள்ளீடுகளை அதிகரிக்கும் சதவீதத்தை விஞ்சியதாக இருக்கும்.
(2) நிறுவனத்தின் உள்ளீடுகளை அதிகரிக்கும் சதவீதத்தை விட குறைவானதாக இருக்கும்.
(3) நிறுவனத்தின் உள்ளீடுகளை அதிகரிக்கும் சதவீதத்திற்கு சமனாக இருக்கும்.
(4) நிறுவனத்தின் நிலையான உள்ளீடுகளை அதிகரிக்கும் சதவீதத்தை விஞ்சியதாக இருக்கும்.
(5) நிறுவனத்தின் நிலையான உள்ளீடுகளை அதிகரிக்கும் சதவீதத்தை விட குறைவானதாக இருக்கும்.

**16.** பின்வருவனவற்றுள் சரியான கூற்று எது?
(1) பொருளியல் இலாபம் = கணக்கியல் இலாபம்
(2) பொருளியல் செலவு = வெளிப்படையான செலவு + உள்ளார்ந்த செலவு
(3) பொருளியல் செலவு = வெளிப்படையான செலவு − உள்ளார்ந்த செலவு
(4) அமையச் செலவு = பொருளியல் இலாபம்
(5) கணக்கியல் செலவு = உள்ளார்ந்த செலவு

**17.** பின்வருவனவற்றுள் சிலருரிமைச் சந்தையின் இன்றியமையாத பண்பு யாது?
(1) சந்தையில் உட்பிரவேசிக்கவும் வெளியேறவும் பூரண சுதந்திரம் உண்டு
(2) பெரிய அளவுத்திட்டத்தில் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் சிலர் காணப்படல்
(3) நெருங்கிய பதிலீடுகளற்ற ஒரு பொருளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர் ஒருவர் மாத்திரம் காணப்படல்
(4) ஓரினத்தன்மை வாய்ந்த ஒரு பொருள் உற்பத்தி செய்யப்படல்
(5) நிறுவனங்களுக்கிடையில் இரகசிய ஒப்பந்தங்கள் இடம்பெறும் வாய்ப்புகள் இல்லை

**18.** ஒரு நிறுவனம் தனது உற்பத்திப் பொருளுக்கு பூரண நெகிழ்வுள்ள கேள்வி வளையியை எதிர்நோக்குமாயின்,
(1) அந்நிறுவனம் விலையை ஏற்கும் ஒரு நிறுவனமன்று.
(2) நிறுவனம் விற்பனையை அதிகரிப்பதற்காக விலையைக் குறைக்க முடியும்.
(3) நிறுவனம் மொத்த வருவாயை அதிகரிப்பதற்காக விலையை அதிகரிக்க முடியும்.
(4) சந்தை விலையில் நிறுவனத்தின் எல்லை வருமான வளையி கிடையச்சுக்கு சமாந்தரமாகக் காணப்படும்.
(5) நிறுவனம் எப்போதும் பூச்சிய பொருளியல் இலாபத்தை உழைக்கும்.

**19.** வெளியீட்டின் மொத்தப் பெறுமதிக்கும் (GVO) மொத்த பெறுமதி சேர்க்கைக்கும் (GVA) இடையிலான வேறுபாடு
(1) நிலையான மூலதன நுகர்வாகும்.
(2) இடைநிலை நுகர்வாகும்.
(3) தேறிய நேரில் வரிகளாகும்.
(4) தேறிய முதன்மை வருமானமாகும்.
(5) முதனிலை உள்ளீடுகளாகும்.

**20.** தேசிய கணக்கீட்டின்போது பின்வரும் நடவடிக்கைகளில் எது உற்பத்தி வரம்பில் இருந்து நீக்கப்பட்டிருக்கும்?
(1) அனுமதிப் பத்திரமின்றி வைத்தியத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் வழங்கும் சேவைகள்
(2) உரிமையாளரே வசிக்கும் குடியிருப்புக்களிலிருந்தான சேவைகள்
(3) வீட்டுத்துறையினரால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள்
(4) அரசாங்கத்தால் கட்டணமின்றி வழங்கப்படும் கல்வி
(5) குடும்ப அங்கத்தவர்களால் நோயுற்றோரும் வயது முதிர்ந்தோரும் பேணிப்பாதுகாக்கப்படல்


Department of Examinations - Sri Lanka

[பக் 4 ஐப் பார்க்க

**21.** முதன்மை வருமானத்தின் பிரதான கூறுகளாவன
(1) ஊழியர்களின் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள், மொத்த தொழிற்பாட்டு மிகை மற்றும் உற்பத்தி மற்றும் இறக்குமதி மீதான தேறிய வரிகள்
(2) ஊழியர்களின் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள், தொழிற்பாட்டு மிகை மற்றும் உற்பத்தி மீதான ஏனைய தேறிய வரிகள்
(3) ஊழியர்களின் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள், மொத்த தொழிற்பாட்டு மிகை மற்றும் கலப்பு வருமானங்கள்
(4) ஊழியர்களின் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள், தொழிற்பாட்டு மிகை மற்றும் நிலையான மூலதன நுகர்வு
(5) ஊழியர்களின் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள், மொத்த தொழிற்பாட்டு மிகை மற்றும் உற்பத்தி மீதான ஏனைய தேறிய வரிகள்

**22.** குறித்த ஒரு ஆண்டில் தேசிய வருமானத்தை விட, தனிநபர் வருமானம் உயர்வாக இருப்பின் அதன் மூலம் பெறப்படும் முடிவு
(1) மாற்றல் செலுத்தல்களின் அளவானது சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகள், கம்பனி வருமான வரிகள் மற்றும் பகிரப்படாத கம்பனி இலாபங்கள் என்பவற்றின் கூட்டுத்தொகையை விஞ்சியுள்ளது என்பதாகும்.
(2) சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புகள், கம்பனி வருமான வரிகள் மற்றும் பகிரப்படாத கம்பனி இலாபங்கள் என்பவற்றின் கூட்டுத்தொகையானது மாற்றல் செலுத்தல்களை விஞ்சியுள்ளது என்பதாகும்.
(3) சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகள், கம்பனி வருமான வரிகள் என்பவற்றின் கூட்டுத்தொகை நேரில் வரிகளை விஞ்சியுள்ளது என்பதாகும்.
(4) மாற்றல் செலுத்தல்களின் அளவானது சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகள், கம்பனி வருமான வரிகள் மற்றும் நேரில் வரிகள் என்பவற்றின் கூட்டுத்தொகையை விஞ்சியுள்ளது என்பதாகும்.
(5) கம்பனி வருமான வரிகள் மற்றும் நேரில் வரிகளின் கூட்டுத்தொகையானது மாற்றல் செலுத்தல்கள் மற்றும் பகிரப்படாத கம்பனி இலாபங்களின் கூட்டுத்தொகையை விஞ்சியுள்ளது என்பதாகும்.

**23.** பின்வரும் வரைபடம் கருதுகோள் ரீதியான ஒரு பொருளாதாரத்தின் மொத்த செலவீட்டுத் (E) தொழிற்பாட்டைக் காட்டுகிறது.




600 பில்லியன் ரூபா மெய் வெளியீட்டு மட்டத்தில்,
(1) 200 பில்லியன் ரூபா பெறுமதியான திட்டமிடப்படாத கையிருப்புகளின் திரட்சி ஏற்பட்டுள்ளது.
(2) 200 பில்லியன் ரூபா பெறுமதியான திட்டமிடப்படாத கையிருப்புகளின் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
(3) 150 பில்லியன் ரூபா பெறுமதியான திட்டமிடப்படாத கையிருப்புகளின் திரட்சி ஏற்பட்டுள்ளது.
(4) 150 பில்லியன் ரூபா பெறுமதியான திட்டமிடப்படாத கையிருப்புகளின் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
(5) பொருளாதாரத்தில் பேரினப் பொருளாதாரச் சமநிலை ஏற்பட்டுள்ளது.

**24.** நேர்க்கணிய உற்பத்தி இடைவெளியைக் கொண்டுள்ள ஒரு பொருளாதாரத்தில்,
(1) பயன்படுத்தப்படாத உற்பத்தி இயலளவு காணப்படும்.
(2) சகடோட்ட வேலையின்மை நிலவும்.
(3) உண்மை வெளியீடு சாத்திய வெளியீட்டை விட குறைவாக இருக்கும்.
(4) பொருளாதார நடவடிக்கைகளின் வேகத்தில் ஒரு பின்னடைவு ஏற்படும்.
(5) கேள்வித் தூண்டல் பணவீக்க அழுத்தங்கள் காணப்படும்.

**25.** ஒரு பொருளாதாரத்தின் மொத்த சேமிப்புத் தொழிற்பாடு $S = -200 + 0.25Y$ ஆயின் அப்பொருளாதாரத்தின் மொத்த நுகர்வுச் சார்பு
(1) $C = -200 + 0.75Y$ ஆகும்.
(2) $C = 200 - 0.25Y$ ஆகும்.
(3) $C = 200 + 0.25Y$ ஆகும்.
(4) $C = -200 - 0.75Y$ ஆகும்.
(5) $C = 200 + 0.75Y$ ஆகும்.

**26.** கருதுகோள் ரீதியான ஒரு பொருளாதாரத்தில், மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி 80 டிரில்லியன் ரூபாவாகவும் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி 240 டிரில்லியன் ரூபாவாகவும், பொதுவிலை மட்டம் 3 ஆகவும் உள்ளதாகக் கருதுக. இப்பொருளாதாரத்தின் பணநிரம்பல் 30 டிரில்லியன் ரூபாவாக இருப்பின் பணத்தின் புழக்கச் சுற்றோட்ட வேகம்
(1) 8 ஆகும். (2) 10 ஆகும். (3) 30 ஆகும். (4) 80 ஆகும். (5) 90 ஆகும்.

Department of Examinations - Sri Lanka

**27.** வங்கி முறைமையில் உள்ள ஒரு வணிக வங்கியிடம் 400 மில்லியன் ரூபா மிகை ஒதுக்குகள் இருப்பதாகவும், நியதி ஒதுக்குத் தேவை 20% ஆகவும் உள்ளதாகக் கருதுக. அதேவேளை இவ்வங்கியின் வாடிக்கையாளர் ஒருவர் தனது நடைமுறைக் கணக்கில் 25 மில்லியன் ரூபாவை வைப்புச் செய்யும்போது வங்கியானது இன்னொரு வாடிக்கையாளருக்கு 120 மில்லியன் ரூபாவை கடன் வழங்குகிறது. தற்போது இவ்வங்கியினால் இதற்கு மேலதிகமாக எவ்வளவு கடன் வழங்கப்பட முடியும்?

(1) 2 125 மில்லியன் ரூபா (2) 2 005 மில்லியன் ரூபா (3) 425 மில்லியன் ரூபா
(4) 305 மில்லியன் ரூபா (5) 300 மில்லியன் ரூபா

**28.** தற்போது இலங்கை மத்திய வங்கியானது பணக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் பிரதான நோக்கங்கள் யாவை?

(1) விலை உறுதிப்பாடும் நிதிமுறைமையின் உறுதிப்பாடும்
(2) விலை உறுதிப்பாடும் நிறைதொழில் மட்டமும்
(3) விலை உறுதிப்பாடும் பேண்தகு அபிவிருத்தியும்
(4) நிறைதொழில் மட்டமும் அதிகளவு வருமான சமபங்கீடும்
(5) விலை உறுதிப்பாடும் அரசாங்கப் பொதுப்படுகடன் சுமையைக் குறைத்தலும்

**29.** நியதி ஒதுக்குத் தேவை 10% ஆக உள்ளதாகவும், மத்திய வங்கி வணிக வங்கிகளிடமிருந்து 300 மில்லியன், ரூபாவை கொள்வனவு செய்ய திறந்த சந்தை நடவடிக்கை ஒன்றை நடத்துவதாகவும் கருதுக. இக் கொள்வனவின் காரணமாக பணநிரம்பலில் ஏற்படக்கூடிய உச்ச அளவிலான மாற்றம் யாது?

(1) 300 மில்லியன் ரூபா அதிகரிப்பு ஏற்படும்.
(2) 300 மில்லியன் ரூபா வீழ்ச்சி ஏற்படும்.
(3) 3 000 மில்லியன் ரூபா அதிகரிப்பு ஏற்படும்.
(4) 3 000 மில்லியன் ரூபா வீழ்ச்சி ஏற்படும்.
(5) 2 700 மில்லியன் ரூபா வீழ்ச்சி ஏற்படும்.

**30.** பணக் கொள்கையானது மொத்தக் கேள்வியின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவது,

(1) நேர் வரி மற்றும் நேரில் வரி வருவாய் பெறுகைகளில் ஏற்படும் மாற்றங்களின் ஊடாக ஆகும்.
(2) பங்கு விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் ஊடாக ஆகும்.
(3) ஏற்றுமதிகளுக்கான கேள்வியில் ஏற்படும் மாற்றங்களின் ஊடாக ஆகும்.
(4) நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவீடுகளில் ஏற்படும் மாற்றங்களின் ஊடாக ஆகும்.
(5) அரசாங்க செலவீடுகளில் ஏற்படும் மாற்றங்களின் ஊடாக ஆகும்.

**31.** ஒரு தாராள சந்தையில் ஒரு வெளிவாரி நிலவும்போது,

(1) சமநிலை விலையானது செயற்கையாக ஓர் உயர் விலையில் நிர்ணயிக்கப்படும்.
(2) சமநிலை விலையானது செயற்கையாக ஒரு குறைந்த விலையில் நிர்ணயிக்கப்படும்.
(3) சந்தையானது சமநிலையை அடைய முடியாது.
(4) சந்தைச் சமநிலையானது சமூக ரீதியில் உத்தம வள ஒதுக்கீட்டினை உறுதிப்படுத்தாது.
(5) ஒரு பொருளின் நுகர்வோர், அப்பொருளின் பராமரிப்பு மற்றும் காப்புறுதி என்பவற்றிற்காக மேலதிக செலவுகளை ஏற்க நேரிடும்.

**32.** சந்தைகள் பொதுப் பொருள்களை உற்பத்தி செய்வதில் தோல்வியடைவது ஏனெனில்,

(1) அவ்வகைப் பொருள்களுக்கு கேள்வி ஏற்படுவதில்லை.
(2) உற்பத்தியாளரால் அப்பொருளின் நுகர்வோரிடமிருந்து ஒரு விலையை அறவிடுவது சாத்தியமில்லை.
(3) அத்தகைய பொருள்கள் பொதுவாக அவற்றின் உற்பத்தியில் பாரியளவு வெளிவாரிச் செலவுகளைக் கொண்டிருப்பதுடன் நுகர்வில் வெளிவாரி நன்மைகளைக் கொண்டிருக்கும்.
(4) அவற்றின் உற்பத்தி, வருமானச் சமமின்மை அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்.
(5) தனியார் நிறுவனங்கள் பொதுவாக அரசாங்கத்துறையை விட உயர்வான உற்பத்திச் செலவைக் கொண்டிருக்கும்.

**33.** இலங்கை அரசாங்கத்தின் மீளெழும் செலவினங்களின் பிரதான கூறுகளாவன,

(1) வட்டிச் செலுத்தல்கள், மெய்ச்சொத்துக்களைக் கையகப்படுத்தல், சம்பளங்களும் கூலிகளும் மற்றும் வீட்டுத்துறைக்கான மாற்றல்கள்
(2) வட்டிச் செலுத்தல்கள், சம்பளங்களும் கூலிகளும், பொதுத்துறை முயற்சிகளுக்கான மூலதன மாற்றல்கள் மற்றும் ஓய்வூதியங்கள்
(3) வட்டிச் செலுத்தல்கள், சம்பளங்களும் கூலிகளும், வீட்டுத்துறையினருக்கான நடைமுறை மாற்றல்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான நடைமுறை மாற்றல்கள்
(4) வட்டிச் செலுத்தல்கள், சம்பளங்களும் கூலிகளும், கடன் தவணைச் செலுத்தல்கள் மற்றும் வீட்டுத் துறையினருக்கான நடைமுறை மாற்றல்கள்
(5) வட்டிச் செலுத்தல்கள், சம்பளங்களும் கூலியும், நிதிச் சொத்துக்களை கையகப்படுத்தல் மற்றும் உரமானியம்

[பக் 6 ஐப் பார்க்க

**34.** ஒடுங்கு முறை வருமான வரியின் கீழ் வறிய மக்கட் பிரிவினர்,
(1) செல்வந்தர்களை விட தமது வருமானத்தின் குறைந்த சதவீதத்தை வரியாகச் செலுத்துவர்.
(2) செல்வந்தர்களை விட பெரியளவு ரூபா பெறுமதிகளை வரியாகச் செலுத்துவர்.
(3) தமது வருமானத்துடன் சமமான வீதத்தில் மாற்றமடையும் அளவினை வரியாகச் செலுத்துவர்.
(4) செல்வந்தர்களை விட தமது வருமானத்தின் உயர் சதவீதத்தை வரியாகச் செலுத்துவர்.
(5) வரி வருவாயைப் பயன்படுத்தி அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வார்.

**35.** தற்போது இலங்கை மத்திய அரசாங்கத்தின் பிரதான வருவாய் மூலாதாரமாக உள்ளது
(1) வருமானம் மீது விதிக்கப்படும் வரிகளாகும்.
(2) உற்பத்தி மற்றும் செலவீடுகள் மீது விதிக்கப்படும் வரிகளாகும்.
(3) இலாபங்கள், பங்கிலாபங்கள் மற்றும் வட்டி வருவாய்களாகும்.
(4) வர்த்தக முயற்சிகளின் மொத்தப் பெறுகைகளாகும்.
(5) லொத்தர் மூலம் பெறப்படும் வருவாய்களாகும்.

**36.** ஒப்பீட்டு நன்மைக் கோட்பாட்டின்படி, பின்வருவனவற்றுள் எவ்விடயம் உண்மையாகும் வண்ணம் நாடுகளில் பொருள் உற்பத்தி நிகழும்போது, உலகின் உற்பத்தி மற்றும் நுகர்வு மட்டங்கள் உயர்ந்த பெறுமதிகளைக் கொண்டிருக்கும்?
(1) அமையச் செலவு மிகக்குறைந்த பெறுமதியினைக் கொண்டிருக்கும் போதாகும்.
(2) முழு நன்மை உச்சப் பெறுமதியைக் கொண்டிருக்கும் போதாகும்.
(3) வர்த்தக மீதி ஒரு மிகைப் பெறுமதியைக் கொண்டிருக்கும் போதாகும்.
(4) நாணய மாற்றுவீதம் வீழ்ச்சியடைந்து செல்லும் போதாகும்.
(5) போக்குவரத்துச் செலவுகள் பெரும்பாலும் பூச்சியப் பெறுமதியைக் கொண்டிருக்கும் போதாகும்.

**37.** A என்னும் நாட்டில், ஓரலகு புடைவை உற்பத்தி செய்ய 5 ஊழிய மணித்தியாலங்களும், அரிசி ஓரலகை உற்பத்தி செய்ய 10 ஊழிய மணித்தியாலங்களும் செலவிடப்படுகின்றன. B என்னும் நாட்டில் ஓரலகு புடைவை உற்பத்தி செய்ய 7 ஊழிய மணித்தியாலங்களும், அரிசி ஓரலகை உற்பத்தி செய்ய 21 ஊழிய மணித்தியாலங்களும் செலவிடப்படுகின்றன. ஒவ்வொரு நாட்டினதும் ஒப்பீட்டு நன்மையின் அடிப்படையில் சிறப்புத் தேர்ச்சியடைய இரு நாடுகளும் தீர்மானிக்குமாயின் A நாடு B நாட்டுடன் எவ்விலையில் பொருள்களை வர்த்தகம் செய்ய விரும்பும்?
(1) ஓரலகு அரிசிக்கு 2 அலகுகளுக்கு மேற்பட்ட புடைவை
(2) ஓரலகு புடைவைக்கு 2 அலகுகளுக்கு மேற்பட்ட அரிசி
(3) ஓரலகு அரிசிக்கு 3 அலகுகளுக்கு மேற்பட்ட புடைவை
(4) ஓரலகு புடைவைக்கு 3 அலகுகளுக்கு மேற்பட்ட அரிசி
(5) ஓரலகு புடைவைக்கு 0.5 அலகுகளுக்கு மேற்பட்ட அரிசி

**38.** பின்வருவனவற்றுள் பாதுகாப்புவாதத்தை நியாயப்படுத்த பெரும்பாலும் பயன்படுத்தப்படக்கூடிய **இரண்டு** வாதங்கள் யாவை?
A - உயர் செலவுடைய உள்நாட்டுக் கைத்தொழில்களைப் பாதுகாத்தல்
B - உபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த கைத்தொழில்களைப் பாதுகாத்தல்
C - இளநிலைக் கைத்தொழில்களைப் பாதுகாத்தல்
D - சுற்றாடல் நியமங்களைப் பாதுகாத்தல்
E - அரசாங்க வரிவருவாயை உச்சப்படுத்தல்

(1) A, D (2) B, C (3) B, D (4) C, D (5) D, E

**39.** ஒரு வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல், சென்மதி நிலுவையின் எந்தக் கணக்கில் பதிவு செய்யப்படும்?
(1) முதன்மை வருமானக் கணக்கு
(2) இரண்டாம் நிலை வருமானக் கணக்கு
(3) மூலதனக் கணக்கு
(4) நடைமுறைக் கணக்கு
(5) நிதிக் கணக்கு

Department of Examinations - Sri Lanka

[பக் 7 ஐப் பார்க்க

Department of Examinations - Sri Lanka


**40.** மிதக்கும் நாணய மாற்று வீதம் என்பதனால் கருதப்படுவது,

(1) வெளிநாட்டு நாணயச் சந்தையில் ஏற்படும் அதிர்ச்சிகளால் ஏற்படும் நிலையற்ற தன்மைகளின்போது நாணய மாற்று வீதம் சீராக்கம் அடையத் தவறுவதாகும்.
(2) வெளிநாட்டு நாணயச் சந்தையில் தலையீடு செய்வதன் ஊடாக அரசாங்கத்தினால் பேணிச்செல்லப்படும் நாணய மாற்று வீதமாகும்.
(3) ஒரு நாட்டு நாணயத்தின் கேள்வி மற்றும் நிரம்பலுக்கு ஏற்ப நிர்ணயிக்கப்படும் நாணய மாற்று வீதமாகும்.
(4) ஒரு நாட்டு நாணயத்திற்கு ஏற்படும் மிகைக் கேள்வி காரணமாக அது மதிப்பிறக்கம் செய்யப்படும் நிலையாகும்.
(5) ஒரு நாட்டு நாணயத்தின் மிகை நிரம்பல் காரணமாக அது பெறுமதியேற்றம் செய்யப்படும் நிலையாகும்.

**41.** சென்மதி நிலுவைப் பிரச்சினை மற்றும் வெளிநாட்டு நாணய ஒதுக்கு பிரச்சினைகளையுடைய நாடுகளுக்கு உதவும் நோக்கில் தாபிக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியானது (IMF) அப்பிரச்சினைகளுக்கு விதந்துரைத்த தீர்வு,

(1) குறித்த நாட்டின் நாணயத்தை மீள் மதிப்பேற்றம் செய்தல்
(2) மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் ஊடாக வெளிநாட்டு நாணய ஒதுக்குகளை குறித்த நாட்டிற்கு கடன் வழங்கல்
(3) குறித்த நாட்டின் நாணய மாற்று வீதத்தை உயர்ந்த ஒரு மட்டத்தில் மீள நிலைநிறுத்த உதவுதல்
(4) குறித்த நாட்டின் வெளிநாட்டு சொத்துக்களைக் கொள்வனவு செய்து அவற்றை வெளிநாட்டு நாணயங்களாக மாற்றல்
(5) ஏற்றுமதிக்கான புதிய சந்தைகளைக் கண்டறிய குறித்த நாட்டிற்கு உதவுதல்

**42.** கீழே உள்ள வரைபடம் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் இலங்கை ரூபாவின் பெறுமதியைக் காட்டுகிறது.




இலங்கை ரூபாவுக்கான கேள்வி D1 இலிருந்து D2 வாக நகர்வதன் விளைவு யாது?

(1) ஐக்கிய அமெரிக்காவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் விலை கூடியனவாக மாறும்.
(2) ஐக்கிய அமெரிக்காவுக்கு பயணம் செய்வது இலங்கைச் சுற்றுலாப் பயணிகளுக்கு மலிவானதாக மாறும்.
(3) ஐக்கிய அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு இலங்கையின் திறைசேரி முறிகள் மிகவும் மலிவானதாக மாறும்.
(4) ஐக்கிய அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு இலங்கையின் திறைசேரி முறிகள் மிகவும் செலவு கூடியதாக மாறும்.
(5) ஐக்கிய அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்வதற்கான செலவு குறையும்.

**43.** பொருளாதார அபிவிருத்தி என்பதனால் கருதப்படுவது,

(1) பொருளாதார வளர்ச்சியுடன் சென்மதி நிலுவை மிகை நிலையை அடைவதாகும்.
(2) பொருளாதார வளர்ச்சியுடன் கட்டமைப்பு மற்றும் பண்பியல் மாற்றங்களையாகும்.
(3) நகர்ப்புற சனத்தொகையின் வாழ்க்கைத்தர மேம்பாடாகும்.
(4) மொத்த தேசிய வருமானத்தின் (GNI) நிலைபேறுடைய அதிகரிப்பாகும்.
(5) சமமான வருமானப் பங்கீட்டுடன் வறுமை மட்டம் குறைவதாகும்.

**44.** பேண்தகு அபிவிருத்தி என்பதனால் குறிப்பிடப்படுவது,

(1) எதிர்காலத்தில் சுற்றாடல் சீர்கேடுகள் ஏற்பட்டாலும் நிகழ்காலத்தில் பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் நம்பகத் தன்மையினை பெற்றுத்தரும் அபிவிருத்தியாகும்.
(2) எதிர்கால சந்ததிக்கு பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் சீர்கேடுகள் ஏற்பட்டாலும் நிகழ்காலத்தில் சுற்றாடலின் பேண்தகு தன்மையினை பெற்றுத்தரும் அபிவிருத்தியாகும்.
(3) எதிர்கால சந்ததி தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் ஆற்றலை விட்டுக் கொடாமல் நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வகையிலான அபிவிருத்தியாகும்.
(4) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பேண்தகு அதிகரிப்புடன் இயற்கை வளங்களை முற்றாகச் சுரண்டுவதாகும்.
(5) நிகழ்கால சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாவிட்டாலும் எதிர்கால சந்ததி தமது தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அபிவிருத்தியாகும்.

[பக் 8 ஐப் பார்க்க

**45.** 'முழுவறுமைக்' கோட்டினால் காட்டப்படுவது,
(1) சமூகத்தில் காணப்படும் மிகக் கடுமையான வறுமை நிலையாகும்.
(2) வாழ்க்கையைக் கொண்டு செல்லத் தேவை என மதிப்பிடப்பட்ட குறைந்தபட்ச வருமான மட்டமாகும்.
(3) தத்தமது கலாசார விழுமியங்கள் மற்றும் பண்பாடுகளுடன் ஒப்பிடுகையில் சார்பளவில் வறியவர்களாகக் கருதப்படும் குடும்பங்களின் எண்ணிக்கையாகும்.
(4) ஒரு நகரத்தில் வறியவர்கள் செறிவாக வாழும் பிரதேசங்களையாகும்.
(5) சனத்தொகையில் மிகக்குறைந்த வருமானம் பெறும் 10% சதவீதமானோரின் சராசரி மாத வருமானமாகும்.

**46.** பின்வருவனவற்றுள் எதனை அளவிட லோரன்ஸ் வளையி பயன்படுத்தப்படுகிறது?
(1) பல்வேறு நாடுகளில் நிலவும் செல்வத்திற்கும் வருமானத்திற்கும் இடையிலான விகிதம்
(2) பல்வேறு நாடுகளில் நிலவும் பொதுப் பொருள்களுக்கும் தனியார் பொருள்களுக்கும் இடையிலான விகிதம்
(3) பல்வேறு நாடுகளில் நிலவும் வருமானச் சமத்துவத்திற்கும் வருமானச் சமமின்மைக்கும் இடையிலான விகிதம்
(4) ஒரு குறிப்பிட்ட நாட்டில் மிகக் கூடிய வருமானம் பெறும் சதவீதத்திற்கும் மிகக் குறைந்த வருமானம் பெறும் சதவீதத்திற்கும் இடையிலான விகிதம்
(5) தொழில்புரியும் வயது சனத்தொகைக்கும் தொழில்புரியாத வயது சனத்தொகைக்கும் இடையிலான விகிதம்

**47.** எத்தகைய வேலையின்மை நிலைமையின் கீழ் ஒரு ஊழியரின் எல்லை உற்பத்தி பூச்சியமாக அல்லது பூச்சியத்தை அண்மித்ததாகக் காணப்படும்?
(1) மறைமுக வேலையின்மை
(2) தன்னார்வமற்ற வேலையின்மை
(3) பருவகால வேலையின்மை
(4) கட்டமைப்புசார் வேலையின்மை
(5) உராய்வு வேலையின்மை

**48.** உலக வங்கியின் 'வியாபாரம் செய்தலின் இலகுதன்மைக்' குறிகாட்டிகள் (Ease of Doing Business Indicators)
(1) நாடுகளை அவற்றின் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பருமனின் அடிப்படையில் விருந்தோம்பும் நாடுகளாகத் தரவரிசைப்படுத்துகின்றன.
(2) நாடுகளை அவற்றின் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பருமனின் அடிப்படையில் மூலாதார நாடுகளாக தரவரிசைப்படுத்துகின்றன.
(3) ஒவ்வொரு நாடும் கொண்டுள்ள ஒப்பீட்டு நன்மையின் அடிப்படையில் கைத்தொழில்களை வகைப்படுத்துகின்றன.
(4) பல்வேறு நாடுகளில் வியாபாரங்களை ஆரம்பித்து நடத்திச் செல்வதில் காணப்படும் இலகுதன்மையை அளவிடுகின்றன.
(5) வறிய நாடுகளின் முதலீடுகளை ஊக்கமிழக்கச் செய்வதால் பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக உள்ளன.

**49.** பின்வரும் கூற்றுகளில் எது 2018 ல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைசார் உள்ளடக்கத்தை சரியாகக் குறிப்பிடுகிறது?

| | விவசாயம், காடாக்கல், மீன்பிடி | கைத்தொழில் | பணிகள் |
|---|---|---|---|
| (1) | 7.0 | 26.1 | 57.7 |
| (2) | 7.6 | 25.8 | 60.4 |
| (3) | 8.2 | 24.0 | 60.1 |
| (4) | 8.9 | 27.8 | 64.4 |
| (5) | 10.2 | 24.5 | 60.2 |

**50.** 2018 ஆம் ஆண்டில் இலங்கையின் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சலுக்கு பங்களித்த முதல் நான்கு நாடுகளாவன
(1) சீனா, ஹொங்கொங், இந்தியா, மலேசியா
(2) சீனா, சிங்கப்பூர், ஜப்பான், சுவிட்சர்லாந்து
(3) சீனா, இந்தியா, ஜப்பான், நோர்வே
(4) சீனா, கனடா, இத்தாலி, ஐக்கிய அமெரிக்கா
(5) சீனா, இந்தியா, மலேசியா, ஜேர்மனி

***

Department of Examinations - Sri Lanka

AL/2020/21/T-II(NEW)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය / புதிய பாடத்திட்டம் / New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

ආර්ථික විද්‍යාව II
பொருளியல் II
Economics II

21 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்பொழுது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

* உப பிரிவுகள் **'அ'**, **'ஆ'** ஆகிய ஒவ்வொன்றிலும் இருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* வரைபுத்தாள்கள் வழங்கப்படும்.

**உப பிரிவு 'அ'**

(இப் பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

**1.** (i) அருமை என்பதனால் கருதப்படுவதென்ன? உற்பத்தி இயல்தகவு வளையியைப் பயன்படுத்தி அருமைப் பிரச்சினையை விளக்குக. (03 புள்ளிகள்)

(ii) உற்பத்தி வினைத்திறனின்மையும் வள ஒதுக்கீட்டு வினைத்திறனின்மையும் வளப்பயன்பாட்டில் விரயமாகக் கருதப்படுவது ஏன்? (04 புள்ளிகள்)

(iii) ஒரு பொருளாதார முறைமையின் பிரதான தொழிற்பாடுகள் யாவை? (03 புள்ளிகள்)

(iv) கோவிட்-19 போன்றதொரு கொள்ளை நோய் காரணமாக ஒரு நாட்டின் உற்பத்தி இயலளவிற்கு யாது நிகழும் என்பதை ஓர் உற்பத்தி இயல்தகவு வளையியைப் பயன்படுத்தி விளக்குக. (05 புள்ளிகள்)

(v) தொழிற்பிரிப்பு ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி மட்ட அதிகரிப்பிற்கு காரணமாவது ஏன் என விளக்குக. (05 புள்ளிகள்)

**2.** (i) ஒரு பொருளுக்கான கேள்விக்கும், கேள்வித் தொகைக்கும் இடையிலான வேறுபாடு யாது? ஒரு வரைபடத்தில் அவ்வேறுபாட்டைக் காட்டுக. (04 புள்ளிகள்)

(ii) வருமானக் கேள்வி நெகிழ்ச்சி எண்ணக்கருவைப் பயன்படுத்தி சாதாரண பொருள், இழிவுப் பொருள் மற்றும் ஆடம்பரப் பொருள் ஆகியவற்றை வரைவிலக்கணப்படுத்துக. (03 புள்ளிகள்)

(iii) ஒரு பொருளாதாரத்தில் பொருள்களைப் பங்கீடு செய்யும் பொருட்டு பயன்படுத்தப்படும் விலை தவிர்ந்த பங்கீட்டு முறைகள் **மூன்றினைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iv) ஒரு சிறிய நகரத்தில் அமைந்துள்ள பாண் சந்தை பின்வரும் கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

$Q_D = 110 - P$ (கேள்வி) $\quad Q_S = -40 + 2P$ (நிரம்பல்)

(a) இச்சந்தையின் சமநிலை விலையையும் தொகையையும் காண்க. (02 புள்ளிகள்)

(b) சமநிலையின்போது மொத்த மிகையின் அளவைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(c) 60 ரூபா விலையில் பாணுக்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சியைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka

[பக் 2 ஐப் பார்க்க

3. (i) 'உயர்ந்தபட்ச விலைக்கும்' 'குறைந்தபட்ச விலைக்கும்' இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) உயர்ந்தபட்ச விலை விதிப்பின் காரணமாக ஒரு பொருளுக்கு மிகைக் கேள்வி ஏற்படுவதேன்? ஒரு வரைபடத்தைப் பயன்படுத்தி உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) உற்பத்தி மானியத்தினால் ஒரு மீளமுடியா நலன் இழப்பு ஏற்படுவது ஏன்? பொருத்தமான ஒரு வரைபடத்தைப் பயன்படுத்தி உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) போட்டிச் சந்தையொன்றில் கேள்வித் தொழிற்பாடு $Q_D = 180 - 2P$ என்னும் சமன்பாட்டினாலும் நிரம்பல் தொழிற்பாடு $Q_S = -15 + P$ என்னும் சமன்பாட்டினாலும் காட்டப்பட்டுள்ளன. இச் சந்தையில் பொருளின் அலகொன்றுக்கு 72 ரூபாவாக குறைந்தபட்ச விலை விதிக்கப்படுமாயின் அதன் விளைவாக ஏற்படும் மீளமுடியா நலன் இழப்பின் அளவை கணிப்பிடுக. (08 புள்ளிகள்)

4. (i) உற்பத்தித் தொழிற்பாடு என்றால் என்ன? குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டிற்கும் நீண்டகால உற்பத்தித் தொழிற்பாட்டிற்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) அளவுத்திட்டச் சிக்கனங்களும் அளவுத்திட்டச் சிக்கனமின்மைகளும் தோன்றுவதற்கான காரணங்கள் யாவை? (04 புள்ளிகள்)

(iii) பொருளியல் இலாபம், உற்பத்தியாளன் மிகை மற்றும் நிலையான செலவு என்பவற்றிற்கு இடையிலான தொடர்பு யாது? (03 புள்ளிகள்)

(iv) பொருளியல் வாடகை என்றால் என்ன? ஒரு உற்பத்திக் காரணியானது எந்நிலைமைகளின் கீழ் ஒரு பொருளியல் வாடகையை உழைக்கலாம்? (04 புள்ளிகள்)

(v) ஒரு நிறைபோட்டிக் கைத்தொழிலில் உள்ள நிறுவனங்களின் குறுங்கால நிரம்பல் வளையிகளில் இருந்து கைத்தொழிலின் குறுங்கால நிரம்பல் வளையியை நீர் எவ்வாறு பெறுவீர்? உமது விடையை பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி விளக்குக. (06 புள்ளிகள்)

5. (i) பின்வரும் நடவடிக்கைகள் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்படுமா உள்ளடக்கப்படாதா என்பதைக் குறிப்பிட்டு உமது விடைக்கான காரணங்களை விளக்குக.

(a) இலங்கையைச் சேர்ந்த ஒரு கம்பனி புதிதாக வெளியீடு செய்த 1 மில்லியன் ரூபா பெறுமதியான பங்குகளை ஒரு முதலீட்டாளர் கொள்வனவு செய்தல்

(b) 50 மில்லியன் ரூபா பெறுமதியான ஒரு புதிய வீட்டைக் கட்டுதல்

(c) கொழும்பில் உள்ள ஒரு உணவகம் ஒரு மீனவரிடமிருந்து 50 000 ரூபா பெறுமதியான மீனைக் கொள்வனவு செய்தல்

(d) ஒரு விவசாயி அருகில் உள்ள வனத்தில் இருந்து 5 000 ரூபா பெறுமதியான தேனைச் சேகரித்தல்

(e) ஒரு பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்குழு 10 மில்லியன் ரூபா செலவீட்டில் கோவிட் -19 கொள்ளை நோயின் பொருளாதாரத் தாக்கங்கள் பற்றிய ஆய்வுத் திட்டத்தை பூர்த்தி செய்தல் (01 × 5 = 05 புள்ளிகள்)

(ii) கருதுகோள் ரீதியான ஒரு பொருளாதாரம் குறித்த பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்படுகின்றன.

| விடயம் | பெறுமதி (பில்லியன் ரூபா) |
|---|---|
| மொத்த நுகர்வுச் செலவீடு | 10 000 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 4 000 |
| பொருள்கள் பணிகள் ஏற்றுமதிகள் | 3 500 |
| பொருள்கள் பணிகள் இறக்குமதிகள் | 4 500 |
| உலகம் முழுவதிலுமிருந்தான தேறிய முதன்மை வருமானம் | – 400 |
| உலகம் முழுவதிலுமிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் | 1 000 |

மேலுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(a) மொத்த தேசிய வருமானம் (02 புள்ளிகள்)

(b) மொத்த தேசிய சேமிப்பு (02 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka

(iii) பின்வரும் மாதிரியானது அரசாங்கத்துறை அற்ற மூடப்பட்ட ஒரு பொருளாதாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது

$C = 500 + 0.8Y$ $I = 600$ (எல்லாப் பெறுமதிகளும் பில்லியன் ரூபாவில்)

(a) இப்பொருளாதாரத்தின் தன்னிச்சையான செலவீடுகளின் அளவு யாது? (02 புள்ளிகள்)

(b) மொத்த வெளியீட்டின் சமநிலை மட்டப் பெறுமதி யாது? (02 புள்ளிகள்)

(c) முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதி யாது? (02 புள்ளிகள்)

(iv) பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி மொத்த செலவீட்டு தொழிற்பாட்டிற்கும் மொத்தக் கேள்வி வளையிக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக. (05 புள்ளிகள்)

## உப பிரிவு 'ஆ'

(இப் பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

**6.** (i) பணத்தின் தொகைக் கோட்பாடு என்றால் என்ன? (04 புள்ளிகள்)

(ii) பணவீக்கத்தின் செலவுகள் யாவை? (04 புள்ளிகள்)

(iii) பணக் கேள்வியை நிர்ணயிக்கும் பிரதான காரணிகள் யாவை? (03 புள்ளிகள்)

(iv) இலங்கை மத்திய வங்கியின் அடிப்படைத் தொழிற்பாடுகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) கருதுகோள் ரீதியான ஒரு பொருளாதாரத்தில் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் மொத்தப் பணக் கையிருப்புக்கள் (M) 6 400 பில்லியன் ரூபாவாகவும், பொதுமக்களால் பேணப்படும் வங்கி வைப்புக்கள் (D) 5 200 பில்லியன் ரூபாவாகவும், நியதி ஒதுக்கு வீதம் 10%ஆகவும், வங்கிகள் வசமுள்ள மிகை ஒதுக்குகளின் அளவு 280 பில்லியன் ரூபாவாகவும் இருந்ததெனக் கருதுக.

(a) இப்பொருளாதாரத்தில் காணப்பட்ட உயர் வலுப் பணத்தின் அளவு யாது? (03 புள்ளிகள்)

(b) பணப்பெருக்கியின் பெறுமதி யாது? (02 புள்ளிகள்)

**7.** (i) பின்வரும் பொருள்களையும் சேவைகளையும் தூய பொதுப் பண்டங்களாகக் கருத முடியுமா? முடியாதா? என்பதைக் குறிப்பிட்டு உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(a) கலங்கரை விளக்கங்கள்

(b) கடல் மீன்கள்

(c) இணையம் (03 புள்ளிகள்)

(ii) மேன்மைப் பண்டங்கள் **இரண்டினைப்** பெயரிட்டு அவை மேன்மைப் பண்டங்களாகக் கருதப்படுவது ஏன் என விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) 'நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம்', 'இடைக்காலக் கணக்கு அறிக்கை' என்பவற்றிற்கிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) அண்மை ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்தின் வரியல்லா அரசிறை வருவாய் மூலாதாரங்கள் யாவை? (04 புள்ளிகள்)

(v) ஒரு தாராள சந்தையில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுள்ள ஒரு பொருள் மிகை உற்பத்தி செய்யப்படுவது ஏன்? வரைபடம் ஒன்றைப் பயன்படுத்தி உமது விடையை விளக்குக. (05 புள்ளிகள்)

**8.** (i) ஒப்பீட்டு நன்மையையும் போட்டி நன்மையையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) ஏற்றுமதி வருவாய்களில் துரித வளர்ச்சியை அடைவதில் இலங்கை எதிர்கொள்ளும் பிரதான தடைகள் யாவை? (05 புள்ளிகள்)

(iii) ஒரு நாட்டின் உத்தியோகபூர்வ சொத்து ஒதுக்குகள் என்பதனால் கருதப்படுவது யாது? அதன் பிரதான கூறுகளை பட்டியற்படுத்துக. (05 புள்ளிகள்)

(iv) ஒரு பொருளின் உற்பத்தியில் முழு நன்மையினை அடையாமல் ஒப்பீட்டு நன்மையை அடைய முடியுமா? புள்ளிவிபர உதாரணம் மூலம் உமது விடையை விளக்குக. (06 புள்ளிகள்)

[பக் 4 ஐப் பார்க்க

Department of Examinations - Sri Lanka

**9.** (i) பொருளாதார வளர்ச்சியின் பிரதான மூலாதாரங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) அபிவிருத்தியின் ஓர் அளவையாக மனித அபிவிருத்திச் சுட்டெண்ணில் காணப்படும் பிரதான குறைபாடுகள் யாவை? (05 புள்ளிகள்)

(iii) "இலங்கையில் வறுமையை குறைப்பதில் சமுர்த்தித் திட்டத்தின் தாக்கம் சிறியதாகவும் குறைந்து செல்லும் தன்மை கொண்டதாகவும் இருந்தது." உலக வங்கியின் இக் கூற்றுடன் நீர் உடன்படுவீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக. (05 புள்ளிகள்)

(iv) இலங்கையில் குடித்தொகை மாற்றங்கள் வயது முதிர்ந்தோருக்கான சமூகப் பாதுகாப்பு வலையமைப்பில் எவ்வாறு புதிய சவால்களை ஏற்படுத்துகின்றன என்பதை விபரிக்குக. (06 புள்ளிகள்)

**10.** (i) நான்காவது கைத்தொழிற் புரட்சி (4IR) என்றால் என்ன? இலங்கை அதனை எதிர்கொள்ளத் தயாராகவுள்ளதா? உமது விடையை விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) இலங்கையின் மீது கோவிட்-19 கொள்ளை நோய் ஏற்படுத்தியுள்ள பொருளாதாரத் தாக்கத்தை சுருக்கமாக விபரிக்குக. (05 புள்ளிகள்)

(iii) "தொடர்ச்சியான காலப்பகுதிகளில் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியைப் பேணிச் செல்ல முடியாத நிலையில் இலங்கை உள்ளது." இக்கூற்றினை நிரூபித்து இலங்கைப் பொருளாதாரத்தின் குறைவான செயலாற்றத்திற்கான காரணங்களைத் தருக. (05 புள்ளிகள்)

(iv) "சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அபிவிருத்தி அனுபவங்கள் தெளிவாக வெளிப்படுத்துவது யாதெனில் இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் பெரும்பாலும் அவற்றின் வினைத்திறனின் அடிப்படையிலன்றி சித்தாந்த அடிப்படையிலேயே கருத்திற் கொள்ளப்பட்டன என்பதாகும்." உதாரணங்களுடன் உமது விடையை விளக்குக. (05 புள்ளிகள்)

* * *

Department of Examinations - Sri Lanka